**ஆனமடுவ பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆனமடுவ பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆனமடுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(IV) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள்

### 1.6.1 பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான கட்டிடங்கள் அமைந்துள்ள காணியும் சபையினால் பயன்படுத்தி நிருவகித்தும் பராமரித்தும் வருகின்ற விளையாட்டு மைதானம், சனசமூக மண்டபம் அமைந்துள்ள காணி 16 சவக்காலைகள் என்பவற்றின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்படும். | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மிகவும் பொருத்தமாகும். |
| (ஆ) | இரண்டு நீர் வழங்கல் செயற்திட்டங்களுக்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகையில் அடுத்துவரும் 12 மாதங்களுக்குள் செலுத்த வேண்டிய ரூபா 2,394,510 கடன் பணத்தை நடைமுறைப் பொறுப்பாகக் காட்டுவதற்குப் பதிலாக நடைமுறையற்ற பொறுப்பாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்படும். | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு மிகவும் பொருத்த மானதாகும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 149,950 மொத்தப் பெறுமதியான இயந்திரங்களும் அலுவலக உபகரணங்களும் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்யப்படும். | மூலதனத் தன்மையான செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | பள்ளம வாராந்த சந்தைக் காணியில் மீன் கடைகளை நிர்மாணித்தல் மற்றும் சமகிகம முன்பள்ளியின் நிலத்தை அழகுபடுத்தல் வேலைக்காக 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒப்பந்தக் காரருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,323,150 மொத்தப் பெறுமதி மொத்த கடன் கொடுத்தோரின் காரணமாக பொதுக் கடன் கொடுத்தோர் கணக்கின் மீதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது நாட் குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்யப்படும். | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டில் சபை நிதியை செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட ரூபா 3,491,464 மொத்த பெறுமதியான நிர்மாணங்கள் காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது நாட் குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்யப்படும் எனத் தயவாகத் தெரிவிக்கின்றேன். | சபைக்குச் சொந்தமான மூலதனத் தன்மையான அனைத்து சொத்துக்களையும் மூலதனமாக்குதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் வழங்குனர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 114,770 மொத்த பெறுமதியானது கடன் கொடுத்தோர்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது நாட் குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்யப்படும் எனத் தயவாகத் தெரிவிக்கின்றேன். | கணக்காண்டிற்கான செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டில் சபை நிர்மாண வேலையின் கீழ் ஆனமடுவ வாராந்த சந்தைக் காணியில் பாக்கு வெற்றிலை வியாபாரம் செய்வதற்காக 18x90 அளவிலான கொட்டிலை தயாரிக்கும் நிரமாண வேலையின் நிறுத்தி வைத்தல் பணமான ரூபா 50,000 பெறுமதியானது வைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது நாட் குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்யப்படும் என தயவாகத் தெரிவிக்கின்றேன். | நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்ட வைப்புக்களுக்கும் பட்டோலையில் காட்டப்பட்ட வைப்புக்களுக்குமிடையே ரூபா 737,830 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்தக் கணக்குகளை தயாரிக்கும் போது நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாகத் தெரிவிக்கின்றேன். | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 22,345,631 மொத்த பெறுமதியான 04 கணக்கு விடயங்களுக்குரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பட்டோலைகள் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தயவாகத் தெரிவிக்கின்றேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் எழுத்து மூல சான்றுகளும் உரிய ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| நி.பி 571 ஆம் பிரிவு | 2,759,380 | 02 ஆண்டுகளை மிகைத்த கேள்விப் பிணைகள் நானாவித வைப்புக்கள், கடை உடன்படிக்கை வைப்புக்கள் போன்ற 213 வைப்பு மீதிகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் நி.பி 571 இன் பிரகாரம் 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாகத் தெரிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 1,441,473 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 7,763,164 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி | | |
| | நிலுவையான வீத வரி வருமானம் ரூபா 9,173,337 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் நிலுவையான வீத வரியை அறவீடு செய்வதற்காக வரியினை செலுத்த தவறியவர்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்ததனை தவிர்த்து வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற கொரோனா தொற்றுநோயின் காரணமாக வீத வரியினை சேகரித்தல் குறைவடைந்துள்ள துடன் எதிர்காலத்தில் நிலுவை மீதியை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன். | வருடாந்த பட்டியலிடப்பட்ட வீத வரியை ஆண்டின் போதே அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | நிலுவையான கடை வாடகை மற்றும் குத்தகை வாடகை மீதியான ரூபா 1,174,079 தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான கடை வாடகையும் குத்தகை வாடகையும் காணப்படுகின்ற கொரோனா தொற்று நோயினால் அறவீடு செய்தல் தாமதமடைந்துள்ள துடன் எதிர்காலத்தில் நிலுவை மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கின்றேன். | நிலுவையான கடை வாடகையையும் குத்தகை வாடகையையும் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) நீதிமன்ற தண்டமும் முத்திரைக் கட்டணமும்<br>-----------------------------------------------<br>மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,002,614 தொகையான நீதிமன்ற தண்டப் பணமும் ரூபா 7,179,506 தொகையான முத்திரைக் கட்டணமும் அறவிட வேண்டியிருந்தது. | ரூபா 4,002,614 தொகையான நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் ரூபா 7,179,506 தொகையான முத்திரைக் கட்டணத்தை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | மீளாய்வாண்டிற் கான அனைத்து தண்டப் பணத்தையும் முத்திரைக் கட்டணத்தையும் இனங்கண்டு அறவீடு செய்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 27 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் IV(ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் ஆனமடுவ பிரதேச சபை எல்லைக்குள் முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்காக ரூபா 100 வீதம் கட்டணம் அறவிடப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் 2020 ஆம் ஆண்டிற்காக 12 முச்சக்கர வண்டிகள் நிறுத்தும் நிலையங்களின் 105 முச்சக்கர வண்டிகளிலிருந்து ரூபா 126,000 பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. | இன்று வரை இந்த வாகன தரிப்பிடத்தினை பொது வாகன தரிப்பிடங்களாக வெளியிடுவதற்காக காணப்படுகின்ற சிக்கல்கள் தீர்த்து வைக்கப்பட்டு வருவதுடன் அதனை விரைவாக வெளியிட்டு அனைத்து வாகனங்களிலிருந்தும் சபையினால் அறவிட வேண்டிய வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய வர்த்தமானியின் பிரகாரம் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள அனைத்து முச்சக்கர வண்டிகளிலிருந்து கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) உள்ளூராட்சி திணைக்களத்தின் இயந்திர பொறியியலாளரினால் மோட்டார் கிரேடர் இயந்திரத்தினை திருத்தம் செய்தல் இடம்பெற்றது என்பதனை பௌதீக ரீதியாகப் பரீட்சிக்காது செய்யப்பட்ட சிபார்சின் அடிப்படையில் ஒரு | இந்த கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய விளக்கமளித்தல்கள் மற்றும் பதில்களை எதிர்பார்த்து வடமேல் மகாாண உள்ளூராட்சி திணைக்களத்தின் | கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளை வழங்குவது |

| | | |
|---|---|---|
| தனியார் நிறுவனத்திற்கு பிரதான இலிகிதரின் அங்கீகாரம் மற்றும் தலைவரின் சான்றிதழின் அடிப்படையில் ரூபா 155,000 பணம் 2020 சனவரி 28 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. | இயந்திர பொறியியலாளருக்கு கணக்காய்வு ஐய வினாவின் ஒரு பிரதி 2021.04.08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க அக்கடிதத்திற்கான பதில் பெற்றுக் கொள்ளப்பட்ட உடன் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு உங்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | தொடர்பாக மேற்கொள்ளப் பட்டுள்ள அனைத்து நடைமுறைகளும் மேற்பார்வை மேற்கொள்ளப் பட்டதா என்பதனைப் பரீட்சித்த பின்னர் கொடுப்பனவுகளை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |